விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 158 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 12 சனிக்கிழமை (25.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

EDUS 077 488 7774
G.C.E A/L 2026
கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான புதிய ஒன்லைன் வகுப்புக்கள் ஆரம்பம்..!
COM.MATHS | BIOLOGY | PHYSICS | CHEMISTRY | ICT
Tamil & English Medium
25.05.2024
(C-0444)
Quality learning | Guaranteed Results | Professional Service | EDUS
ஒன்லைன் கற்பித்தலில் இலங்கையின் முன்னணி ஆசிரியர்களுடன் உங்கள் சாதனைப் பயணத்தை ஆரம்பித்திடுங்கள்.

நாடளாவிய ரீதியில்
## காற்றின் வேகம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாகவும், தென்மேற்கு பருவக்காற்றின் வேகம் அதிகரித்து வருவதன் காரணமாகவும் அவ் 15

யுத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து
## வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் - ரணில்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சித்துறைக் கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் ஏன் இங்கு வருகிறீர்கள் 15

# பிரபாகரனின் தீர்மானமே யுத்தத்துக்கு வழிவகுத்தது

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(கொழும்பு)

**இறுதி 3 வருடங்களில் பிரபாகரனின் பிழையான தீர்மானங்களே இறுதிக்கட்ட யுத்தத்துக்கு வழிவகுத்தது என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை மற்றும் பேச்சுக்களுக்கான விசேட அனுசரணையாளராக செயற்பட்ட நோர்வே அரசாங்க பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம், 15

பாராளுமன்றைக் கலைக்க
## எவ்விதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை - பந்துல

(கொழும்பு)

பாராளுமன்றைக் கலைக்க எவ்விதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15

## ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய நபர் கொழும்பில் கைது

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 4 ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இலங்கையர் ஒருவர் கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 15

## கிளிநொச்சிக்கு வருகை தரும் ரணிலைச் சந்திக்கமாட்டோம்
### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கப் போவதில்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே இந்த விடயத்தை தெரிவித் 15

யாழ்.போதனா வைத்தியசாலை
## தேசிய வைத்தியசாலையாக விரைவில் தரமுயர்த்தப்படும்
### ஜனாதிபதி ரணில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை விரைவில் தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன் மூலம் வடக்கில் சிறந்த சுகாதார கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும் என ஜனாதிபதி 15

கசிப்பு விற்பனை
## கோப்பாயில் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ்மா 15

யாழில் ஜனாதிபதி தலைமையில்
## காணி உறுதிப்பத்திரங்கள் 322 பேருக்கு பகிர்ந்தளிப்பு



(யாழ்ப்பாணம்)

"உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்றது. 15

தையிட்டி விகாரைக்கு எதிராக
## போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்திய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திஸ்ஸ விகாரைக்கு அருகில் நேற்று எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு வருகை தந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை நோக்கி போராட்டக்காரர்கள் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத சிறுபான்மையினருக்கு எதிராக

# பௌத்த பிக்குகளால் தூண்டப்படும் ஒடுக்குமுறைகளை அரசு தடுக்கவில்லை

## அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மத சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது. இலங்கையின் மதச்சுதந்திரம் தொடர்பான வருடாந்த அறிக்கையில் அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக தமது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, மதச் சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்குமாறு ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்துள்ளது.

2023ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் மதச்சுதந்திரப் போக்கு எத்தகைய மட்டத்தில் காணப்பட்டது, அந்நாடுகளின் மதச்சுதந்திர நிலைவரம் தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பன உள்ளடங்கலாக மதச்சுதந்திரம் தொடர்பில் விரிவான தகவல்களை உள்ளடக்கிய 102 பக்க வருடாந்த அறிக்கையை மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் இலங்கையின் நிலைவரம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

தேவாலயங்களைப் பதிவு செய்வதில் கிறிஸ்தவ சமூகம் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தது. அதுமாத்திரமன்றி மத சிறுபான்மையினரை இலக்குவைப்பதற்கும், கண்காணிப்பதற்கும், தடுத்துவைப்பதற்கும் அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்தியது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னர் குறிப்பாக முஸ்லிம்களைக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட பரந்துபட்ட அதிகாரங்களைக் கொண்ட பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

2023ஆம் ஆண்டு முழுவதும் பயங்கரவாத தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டம் (ஐ.சி.சி.பி.ஆர்) ஆகியவற்றின்கீழ் நபர்களைப் பலவந்தமாக தடுத்துவைத்ததன் ஊடாக இலங்கை அரசாங்கம் மதச்சுதந்திரத்தை வெகுவாக மட்டுப்படுத்தியது. அதேவேளை கடந்த ஆண்டு முழுவதும் தொல்பொருள் திணைக்களமானது பௌத்த பிக்குகள் மற்றும் ஏனைய அரச கட்டமைப்புக்களுடன் ஒன்றிணைந்து பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்காக வட, கிழக்கு மாகாணங்களில் இந்து மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமித்தது.

2023 மார்ச்சில் பௌத்த பிக்குகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இணைந்து திருகோணமலையில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அதற்கு எதிராகப் போராட்டம் மேற்கொண்ட தமிழ், முஸ்லிம்களை சுட்டுத்தள்ளுவோம் எனக்கூறி அச்சுறுத்தினர். அடுத்ததாக குருந்தூர்மலை ஆலய விவகாரத்தில் 2022ஆம் ஆண்டு நீதிபதி ரி.சரவணராஜாவினால் வழங்கப்பட்ட உத்தரவு 2023 செப்டெம்பரில் தொல்பொருள் திணைக்களத்தினால் மீறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரச்சுறுத்தல் எனக் குறிப்பிட்டு பதவியை இராஜினாமா செய்த நீதிபதி சரவணராஜா, நாட்டைவிட்டு வெளியேறினார். அதுமாத்திரமன்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் மதச்சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும்படி கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரக அதிகாரிகளிடம் வலியுறுத்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அழுத்தம் பிரயோகித்தல் ஆகிய நடவடிக்கைகளை அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதேபோன்று இலங்கையில் தற்போது நிலவும் மதச்சுதந்திரம் சார்ந்த பிரச்சினைகளை கருத்துக்கோரல், சந்திப்புக்கள், கடிதங்கள் ஊடாகக் கேட்டறிவதற்கு அமெரிக்க காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவ்வருடாந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)





வருடாந்த வைகாசிப் பெருவிழா
2024

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி

பஞ்சபுராணம் ஓதுதல்

ஆசியுரை
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - 02ஆவது சந்நிதானம்

தலைமையுரை
திரு. ஆ. சிவநாதன் (ஓய்வுநிலை அதிபர்)

வரவேற்பு நடனம் : ஏழாலை ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
கலை நிகழ்வுகள் : நெல்லை முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள்

பட்டிமன்றம்
நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மனித வாழ்விற்கு வாழ்வளிக்கிறது? வாழ்வளிக்கவில்லை?

திரு. பரா. ரதீஸ் — திரு. நாக.தமிழிந்திரன்
திரு. த.கருணாகரன் — திரு. பா.ரமேஷ்
செல்வி தயாளினி குமாரசாமி — செல்வி கதிர்தர்சினி பரமேஸ்வரன்

நடுவர் : சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல்

இன்னிசை கானம்
பாட்டு : சிதம்பரம் சிவமைந்தன் (விரிவுரையாளர் யாழ். இராமநாதன் அரங்காற்றுகை பீடம்)
ஹார்மோனியம்: இசைக்கலைமணி ந. செல்வச்சந்திரன்
மிருதங்கம் : நுண்கலைமாணி சி. துரைராசா
தபேலா : கலாவித்தகர் வே. பிரபாகரசர்மா

நன்றியுரை
திரு. க. கைலைநாதன் (ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய காலை பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் விழா நிகழ்வுகள் நடைபெறும்.

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை

(C-445)


# தமிழினப்படுகொலை குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## பிரித்தானிய தொழிலாளர் கட்சி

முள்ளிவாய்க்கால் படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் தலைவர் கீர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில், இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களையும், பரந்த மனித உரிமை மீறல்களையும் நினைவுகூருகிறோம்.

இன்று, என் எண்ணங்கள் யாவும் பாதிக்கப்பட்டவர்கள், தப்பி பிழைத்தவர்கள், அவர்களின் அன்புக்குரியவர்கள், மற்றும் அவர்கள் அனுபவித்த கொடுமைகளால் ஏற்பட்ட வலியுடன் தொடர்ந்து வாழ்பவர்கள் நோக்கியே உள்ளது.

இறுதி போரில் காணாமல் போனவர்களை நினைவு கூர்வதுடன், அட்டூழியங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதை நினைவூட்டுவதாகவும் இந்நாள் இருக்க வேண்டும்.

நம் நாடு முழுவதும் உள்ள தமிழ் சமூகங்கள் இந்த புனிதமான நாளை நிதானித்து சிந்திக்கும்போது, நிரந்தர அமைதி, நல்லிணக்கம் மற்றும் தமிழ் மக்களுக்கான நீண்டகால அரசியல் தீர்வை நோக்கி உழைப்பதற்கான நமது உறுதிப்பாட்டை தொழிலாளர் கட்சி மீண்டும் உறுதிப்படுத்துகிறது என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# சீரற்ற காலநிலையால் 6 பேர் பரிதாப மரணம்

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதுடன் பலத்த காற்றுடனான காலநிலை நிலவி வருகின்றது.

[illegible] 18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புத்தளம் மாவட்டத்திலேயே பெருமளவானோர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், நாடு முழுவதும் தென்மேற்கு பருவக்காற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமையினால் இன்று காலை வரை மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்க தொலைபேசிக்கு

## அடிமையாகும் சிறுவர்களுக்கு நீரிழிவு நோய்

## ஆய்வில் கண்டறிவு

(கொழும்பு)

**இலங்கையில் 10 வயதுக்குப்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்க தொலைபேசிகளுக்கு அடிமையாகி உள்ளதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**



தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று ஆய்வை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருப்பதாகவும் இந்த சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக நிபுணர் தெரிவித்துள்ளார்.

மேலும், கையடக்க தொலைபேசிகளுக்கு அடிமையான சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயற்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்வதாகவும் பெற்றோர்களால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## யாழ்.பெண்ணுக்கு மனித உரிமைகளுக்கான விசேட விருது

(சியோல்)


தென் கொரியாவின் மே 18 நினைவு அறக்கட்டளையின் 2024 ஆம் ஆண்டின், மனித உரிமைகளுக்கான குவாங்ஜு விருதினை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுகந்தினி மதியமுதன் பெற்றுள்ளதுடன் தைரியம் மற்றும் நம்பிக்கையின் அடையாளம் என புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திடம் அனைத்தையும் இழந்த ஏராளமான பெண்களுக்கு தைரியம் மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக சுகந்தினி மதியமுதன் திகழ்வதாக புகழாரம் சூட்டப்பட்டது.

இந் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி தென் கொரியாவில் நடைபெற்றது.

சுகந்தினியின் செயற்பாடுகள் மே 18 இன் உணர்வோடு நெருக்கமாக இணைந்திருப்பதாக நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுவினர் சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-6)

## மக்களை மகிழ்ச்சிப்படுத்திய சில தானசாலை நிகழ்வுகள்



(கண்டி)

பொசன் போயாவை முன்னிட்டு நேற்று முன்தினம் நாடு முழுவதும் தானசாலைகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.

நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் உணவுகளை பெற்று உண்டு மகிழ்ந்தனர். அதில் சில தானசாலை நிகழ்வுகள் மக்களை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளன.


கண்டி, பிலிமதலாவ பகுதியிலுள்ள வீதியில் வைத்து மரக்கறி தன்சல் வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தொகை மரக்கறிகளை மக்களுக்கு இலவசமாக வியாபாரி ஒருவர் வழங்கியுள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியில் இவ்வாறான தன்சல் மக்களுக்கு மிகவும் பிரயோகமாக மாறியுள்ளது.

பல மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருந்த மக்கள் தன்சல் மரக்கறிகளை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் விசேட உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய ஜனாதிபதியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர். (நி-6)

## மான்கொம்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இருந்து பேருந்தில் யாழ்ப்பாணத்திற்கு மான் கொம்பை கொண்டு வந்தவர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 42 வயதான சந்தேகநபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-6-33)



## பொருளாதார மாற்றச் சட்டமூலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் திடீரென சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பொருளாதார மாற்றச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படுகின்றது.

பொருளாதார முன்னேற்றம் என்று கூறிக்கொண்டு பாரதூரமான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

அந்த சட்டமூலத்தில் முதலீட்டுச் சபையை இல்லாதொழிப்பதற்கான சரத்து உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சபையோ, தொழிலதிபர்கள் சங்கங்களோ, தனியார் துறையோ எவரிடமும் கோரிக்கை விடுக்கப்படவில்லை.

எனவே இவ்வாறான சட்டமூலத்தை கொண்டுவருவதற்கான விருப்பம் என்னவென்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இந்த சட்டமூலத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம்.


குறித்த சட்டத்தால் பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகச் செயற்படவுள்ளோம்.

தொழிற்சங்கங்களுடன் இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளோம்" என சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராஜஸ்தான் கனவு தகர்ந்தது பைனல் வாய்ப்பை இழந்தது



தகுதிச் சுற்று 2இல் ஏமாற்றிய ராஜஸ்தான் அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து பைனல் வாய்ப்பை இழந்து வெளியேறியது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., தகுதிச் சுற்று-2ல் ராஜஸ்தான் - ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் சஞ்சு சாம்சன், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**பவுல்ட் அசத்தல்**

ஹைதராபாத் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. பவுல்ட் வீசிய முதல் ஓவரில் அபிஷேக் சர்மா (12) ஆட்டமிழந்தார். அஷ்வின் வீசிய 4வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ராகுல் திரிபதி (37), பவுல்ட் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய பவுல்ட் "வேகத்தில்" மார்க்ரம் (1) வெளியேறினார். டிராவிஸ் ஹெட் (34) ஆறுதல் கொடுத்தார். அவேஷ் கான் வீசிய 14ஆவது ஓவரில் நிதிஷ் குமார் ரெட்டி (5), அப்துல் சமத் (0) ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய கிளாசன் (50) அரைச்சதம் விளாசினார். ஷாபாஸ் அகமது (18) சோபிக்கவில்லை. உனத்கட் (5) "ரன்-அவுட்" ஆனார்.

**கொல்கத்தாவுடன் மோதல்**

நாளை சென்னையில் நடக்கவுள்ள பைனலில் கொல்கத்தா - ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

20 ஓவர்களில் ஹைதரா பாத் அணி 9 விக்கெட்டுக்களை 175 ஓட் டங்களை எடுத்தது. அணித் தலைவர் கம்மின்ஸ் (5) ஆட்டமிழக்காமல் இருந் தார்.

**ஜெய்ஸ்வால் நம்பிக்கை**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு டாம் கோலர்-காட்மோர் (10) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். புவனேஷ்வர் வீசிய 6வது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரி விரட்டிய ஜெய்ஸ்வால் (42) நம்பிக்கை கொடுத்தார். அணித் தலைவர் சாம் சன் (10) நிலைக்கவில்லை. ஷாபாஸ் அகமது வீசிய 12வது ஓவரில் ரியான் பராக் (6), அஷ்வின் (0) ஆட்டமிழந்த னர். அபிஷேக் "சுழலில்" ஹெட்மயர் (4) போல்டானார். நடராஜன் "வேகத் தில்" பாவெல் (6) வெளியேறினார்.



கம்மின்ஸ் பந்தில் வரிசையாக 2 பவுண்டரி அடித்த துருவ் ஜூரெல், 26 பந்தில் அரைசதம் எட்டினார்.

ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஜூரெல் (56) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஹைதராபாத் அணி பைனலுக்குள் நுழைந்தது.

## விடைபெற்றார் தினேஸ் கார்த்திக்



ஐ.பி.எல்., அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார் தினேஷ் கார்த்திக்.

தமிழகத்தை சேர்ந்த விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் (வயது-38). கடந்த 2004ல் இந்திய அணியில் அறிமுகமானார். தோனி வரவுக்கு பின் இவரது இடம் கேள்விக்குறியானது. விடாமுயற்சியால் அணியில் அவ்வப்போது இடம்பெற்று வந்தார்.

ஐ.பி.எல்., தொடரில் தினேஷ் கார்த்திக்கிற்கு மவுசு அதிகம். 2008ல் இருந்து அனைத்து தொடரிலும் பங்கேற்றுள்ளார். டில்லி அணிக்காக முதலில் களமிறங்கினார். பின் பஞ்சாப், மும்பை அணிக்கு சென்றார். 2014ல் மீண்டும் டில்லி அணிக்கு அதிகபட்சமாக ரூ. 12.5 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். 2015ல் பெங்களூரு அணி இவரை ரூ. 10.5 கோடிக்கு வாங்கியது. அடுத்து குஜராத் அணிக்காக விளையாடினார். 2018ல் கொல்கத்தாவின் தலைவராகச் செயற்பட்டார். 2022ல் மீண்டும் பெங்களூரு பக்கம் (ரூ. 5.5 கோடி) திரும்பினார்.

இம்முறை "பினிஷராக" ஜொலித்தார். கடைசி கட்டத்தில் மிரட்டினார். 15 போட்டிகளில் 326 ஓட்டங்கள் (சராசரி 36.22, "ஸ்டிரைக் ரேட்" 187.55) எடுத்தார். 17 ஆண்டு கால ஐ.பி.எல்., பயணத்தில் 6 அணிகளுக்காக விளையாடியுள்ளார். சென்னைக்காக பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 257 போட்டிகளில் 22 அரைச்சதங்களுடன் 4,842 ஓட்டங்கள், 145 "பிடியெடுப்புகள்", 37 "ஸ்ரம்பிங்" செய்துள்ளார்.

**மீண்டும் வர்ணனை**

அகமதாபாத், மோடி மைதானத்தில் நடந்த "எலிமினேட்டர்" போட்டியில் ராஜஸ்தானிடம்தோற்ற பெங்களூரு அணி "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்தது. இந்த சோகத்துடன் ஐ.பி.எல்., அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார் தினேஷ் கார்த்திக். மைதானத்தை சுற்றி வந்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார். அப்போது ஹோலி, டுபிளசி உள்ளிட்ட சக வீரர்கள் ஆறுதல் அளித்தனர். பெங்களூரு வீரர்கள் இருபுறமும் அணி வகுத்து நின்று கௌரவம் அளித்தனர்.

வரும் "ரி20" உலகக்கிண்ணத் தொடருக்கு தினேஷ் கார்த்திக் தேர்வு செய்யப்படவில்லை. இனி இவர் சர்வதேச கிரிக்கெட்டுக்கு திரும்ப வாய்ப்பில்லை. மீண்டும் வர்ணனையாளராக அவதாரம் எடுக்கலாம்.

## வரலாறு படைத்தது அமெரிக்கா

## ரி20 தொடரை வென்றது



இரண்டாவது "ரி20" போட்டியில் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அமெரிக்க அணி தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

அமெரிக்கா சென்றுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் அமெரிக்கா வென்றது. இரண்டாவது போட்டி ஹூஸ்டனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அமெரிக்க அணிக்கு ஸ்டீவன் டெய்லர் (31), அணித் தலைவர் மோனக் படேல் (42), ஆரோன் ஜோன்ஸ் (35) கைகொடுக்க, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை எடுத் தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு அணித் தலைவர் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (36), தவ்ஹித் (25), சாகிப் அல் ஹசன் (30) ஆறுதல் கொடுத்தனர். ஒரு விக்கெட் கைவசம் இருந்த நிலையில் கடைசி ஓவரில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அலி கான் பந்துவீசினார். இரண்டாவது பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ரிஷாத் (9), அடுத்த பந்தில் ஆட்ட மிழந்தார். பங்களாதேஷ் அணி 19.3 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அமெரிக்கா சார்பில் அலி கான் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இதன்மூலம் அமெரிக்க அணி, ஐ.சி.சி., முழு உறுப்பினர் அந்தஸ்து பெற்ற அணிக்கு எதிராக முதன்முறையாக "ரி20" தொடரை கைப்பற்றி வரலாறு படைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரம் முதல் விசேட கடன் திட்டங்கள்



(கொழும்பு)

அடுத்த வாரம் முதல் இலங்கையில் பல விசேட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் உள்ள தொழிற்துறையினரின் நிதித் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு, குறித்த கடன் திட்டங்களை வழங்கவுள்ளதாக சாந்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சுயநிதித் திட்டத்தின் கீழ்

# இந்திய பல்கலைக்கழகங்களில் கற்பதற்கு இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

சுயநிதித் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கு இலங்கை மாணவர்களின் விண்ணப்பங்களைக் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வரவேற்கிறது.

அதன்படி, 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான MBBS, BDS, BE, B.Tech, B.Pharm, B.Arch, Diploma level Technical மற்றும் Diploma in Pharmacy ஆகிய கற்கைநெறிகளுக்குத் தகுதியான இலங்கை மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் சமர்ப்பிக்க முடியும்.

MBBS/BDS பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் NEET தேர்வு மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாட நெறிகளில் 50 சதவீதம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

பொறியியலில் BE/B.Tech மற்றும் Diploma in engineering ஆகிய கற்கை நெறிகளுக்கு பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் கணிதம் ஆகிய பாட நெறிகளில் 60 சதவீதம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் 50 சதவீதம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

B.Pharmacy மற்றும் Diploma in Pharmacy ஆகிய கற்கைநெறிகளுக்கு உயிரியல், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடநெறிகளில் 60 சதவீதம் மற்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் 50 சதவீதம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

B.Arch கற்கைநெறிக்கு புதுடில்லியின் கட்டடக்கலை கழகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் அனைவரும் தங்களது விண்ணப்பங்களைக் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## சீரற்ற வானிலை

# மீட்பு நடவடிக்கைகளுக்காக விமானப்படை தயார் நிலையில்

(கொழும்பு)

சீரற்ற வானிலையை கருத்தில் கொண்டு மீட்பு நடவடிக்கைகளுக்காக ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவக் காற்றின் வேகம் அதிகரிப்பதன் மூலம் 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, இன்று காலை 10.30 மணி வரை மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வட மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து மத்திய வங்கக்கடலில் புயலாக உருவாகக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்பரப்புகளும் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சீரற்ற வானிலையை கருத்தில் கொண்டு மூன்று ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

அவசர நிலை தொடர்பில் தகவல் கிடைக்கும் பட்சத்தில் இந்த ஹெலிகொப்டர்கள் மீட்பு பணிகளுக்காக அனுப்பி வைக்கப்படும் என விமானப்படை ஊடகப் பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (நி-6)

# இரத்த தானங்களின் போது இரத்தத்தை வீணடிக்காதீர்கள்

## தேசிய இரத்த மாற்று நிலைய பணிப்பாளர் கோரிக்கை

(கொழும்பு)

இரத்த தானம் செய்யும் போது இரத்தத்தின் அளவை மீறவேண்டாமென தேசிய இரத்த மாற்று நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் லக்ஷ்மன் எதிரிசிங்க இரத்த தானம் செய்பவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெசாக் பண்டிகையின் போது இரத்த தான நிலையத்திற்கு இரத்த தானம் செய்வதற்கு அதிகளவு நன்கொடைகள் வழங்கப்படுமென பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனால், அதிக இரத்தம் கொடுக்கப்படும்போது அதை சேமிப்பதில் சிரமமேற்பட்டு வீணடிக்கப்படுகின்றது.

எனவே, இரத்ததான சிகிச்சை நிலையங்களில் தேவையான இரத்தத்தை மாத்திரம் பெறவேண்டுமென தேசிய இரத்த மாற்று நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரலில் தேசிய இரத்த மாற்று நிலையத்தில் இரத்தம் தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும், தற்போது நிலைமை தணிந்து தேவையான அளவு இரத்தம் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இராசிபலன்

25.05.2024
வைகாசி 12, சனிக்கிழமை
துதியை முன்னிரவு 7.18 மணிவரை
கேட்டை முற்பகல் 11.04 மணிவரை

சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி.

திருஞானசம்பந்தர் குருபூசை.

வளவன்

**மேஷம்**: அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆசியைப் பெற்று மகிழ்வீர்கள்.

**ரிஷபம்**: குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**மிதுனம்**: நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள்.

**கடகம்**: மறைமுக எதிர்ப்புகள் அகலும், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கன்னி**: சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்**: சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், அனைத்திலும் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: சோம்பலை விலக்குவது நல்லது, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்**: தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவான நாள்.

**கும்பம்**: குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மீனம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

நன்கு தொடங்குவதே பாதி முடிந்ததற்குச் சமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பீடத்திற்கான கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார் ஜனாதிபதி





(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்காக யாழ். நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதி கட்டடங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்து வைத்தார். (நி-6-33)

# பனைமரம் விழுந்து வீடு சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் மேற்கு பகுதியில் வீடொன்றின் மீது பனைமரம் முறிந்து விழுந்தமையால் ', வீட்டின் ஓடுகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீசிய காற்றின் காரணமாகவே வீட்டு வளவினுள் நின்ற பனை மரம் முறிந்து வீட்டின் மீது விழுந்தமையினால் சேதம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை நிலவும் சீரற்ற காலநிலையால் கொக்குவில் பகுதியை சேர்ந்த இரண்டு குடும்பங்களை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிக்கையிட்டுள்ளது. (நி-6-33)



"நீரிழிவு முகாமையில் உணவு உள்ளம் உடற் பயிற்சி" எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்.சித்த மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர் ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

## யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் கறுப்புக் கொடி பறக்கவிட்டு கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுழைவாயில் மற்றும் மருத்துவபீட வாயிலில் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் யாழ்.போதனா மருத்துவமனையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இச் செயற்பாட்டிற்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டிப்பு தெரிவித்து பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் மருத்துவபீடம் என்பவற்றின் வாயிலில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க போராட்டமானது தொடர்ச்சியாக 23 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி யா/விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத் தலைவர் வ.செல்வராசா தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (நி-6)

# ரதயாத்திரை

(கிளிநொச்சி)

ஸ்ரீ ஜெகந்நாதரின் ரத யாத்திரை விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெகந்நாதரின் ரத யாத்திரை கனகபுரம் வீதி, ஸ்ரீ தான்தோன்றீஸ்வரி நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இருந்து இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும் ரத யாத்திரை கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தி,RS Green Barathi Resort ஐ வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து மதியம் 1 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# திருக்குறளும் சுகநலமும் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

குணராஜா நக்கீரன் எழுதிய 'திருக்குறளும் சுக நலமும்' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம் பெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எஸ். திருவாகரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் மற்றும் யாழ் போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக சிவபுமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-33)

# திருஞானசம்பந்தர் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபை நடத்தும் திருஞானசம்பந்தர் மூர்த்திநாயனார் குரு பூசை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சபை பிரார்த்தனை மண்டபத்தில் சபைத்தலைவர் உ.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/செட்டித்தெரு மெதடிஸ் தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரி கந்தசாமி சசிகரன் கலந்து கொள்ளவு ள்ளார்.

திருமுறை ஓதுதல், பேச்சுக்கள், தேவாரம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். (நி-6)



பாடசாலைச் சுகாதார மேம்பாட்டு வழிகாட்டல்கள் குறித்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெளிவூட்டும் கலந்துரையாடல் அண்மையில் பூநகரி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. (படம்: சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்களை தொடர்ந்து மறுக்கும் இலங்கை

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சாடல்

(வோஷிங்டன்)

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இராணுவத்தினரால் மீறப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்துவருவதாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் எலைன் பியர்சன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்ததின் போது கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் நினைவு கூர்ந்தவர்களை பொலிஸார் அச்சுறுத்தியதுடன் சிலரை தடுத்து வைத்திருந்தாகவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் எலைன் பியர்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த 18ஆம் திகதி வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளை குழப்பும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டதாக எலைன் பியர்சன் மேலும் தெரிவித்துள்ளார்.



பாதிக்கப்பட்ட தரப்பினரை மௌனிக்கச்செய்வதற்கே அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என கடந்த 17 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்ததாகவும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை வெளிநாட்டு அரசாங்கங்கள், ஐக்கியநாடுகள் அமைப்புகள் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் பொறுப்புக் கூறல் செயற்றிட்டத்திற்கான ஆணையை செப்டெம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என தெரிவித்த எலைன் பியர்சன், அந்த குற்றங்களிற்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு உலகெங்கிலும் உள்ள சட்டத்தரணிகள் இந்த ஆதாரங்களை பயன்படுத்துவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## பயங்காரவாத அமைப்புக்கள் குறித்து விசேட விசாரணைகள் ஆரம்பம்

### பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளை பேணுகின்றவர்கள் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு புலனாய்வு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கு பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் அண்மையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பில் இந்தக் குழு விசாரணைகளை முன்னெடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982- இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>கி.பா: 6 3/4<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:QS(Pvt).விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/14522 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கிபா: 52 1/2<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: Bsc<br>எதிர்பார்ப்பு:Degree holder . கனடா விரும்பத்தக்கது<br>தொ.இ: G/14562 |
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம் :மகம்<br>கி.பா- 25<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்-Bsc in IT,Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: IT தொடர்பானவர்<br>தொ.இ: B/14523 | பிறப்பு-1991- இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 19 உயரம்: 5'4"<br>சூரி செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BSAபட்டதாரி .NGO<br>எதிர்பார்ப்பு: Engineer,Accountant,QS<br>தொ.இ: G/14563 |
| பிறப்பு: 1984- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 11 1/2<br>உயரம் :6<br>தகைமை/தொழில்: B.Com, Management Assistant<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: B/14526 | பிறப்பு-2000- இந்து<br>நட்சத்திரம்-ஆயிலியம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14567 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 48 உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:CBF,DBF, Assistant Manager<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14527 | பிறப்பு-1996- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா - 3/4<br>சூரி செவ் 10 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Bsc in Agriculture, IT Field<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்/ வெளிநாடு-(கனடா,லண்டன் )<br>தொ.இ: G/14568 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## சந்திரிக்காவுடன் மந்திராலோசனை நடத்திய ஜனாதிபதி ரணில்





(ஜகர்த்தா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கும் இடையில் மந்திராலோசனை நடத்தப் பட்டுள்ளது.

இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, அங்கு சந்திரிக்காவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது. எனினும் அங்கு பேசப்பட்ட விடயம் குறித்து தகவல்கள் இரகசியமாக பேணப்பட்டுள் ளது.

ஜனாதிபதி ரணிலுடன், மகிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன, அனுர யாப்பா உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவொன்றும் சென்றுள்ளது. குறித்த நால்வரும் பண்டார நாயக்க ஆதரவாளர்கள் என்ற வகையில் அண்மைக்காலம் வரை முக்கிய நபர்களாக இடம் பிடித்திருந்தனர்.

இவர்களுக்கு மேலதிக மாக ரணில் விக்கிரமசிங்க வுடன் நிமல் லான்சாவும் இந்த பயணத்தில் இணைந்துள்ள தாக தற்போது தெரியவந்துள் ளது.

உலக நீர் தினத்தில் பங் கேற்பதற்காக ரணில் விக்கிரமசிங்க இந்தோனேசியாவுக்குச் செல்வது தொடர்பில் ஆர ம்பம் முதலே அரசியல் அவதா னிகள் கவனம் செலுத்தியுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளது. (நி-6)


விற்பனைக்குண்டு
வட்டுக்கோட்டையில் சணல் கிடாய் 02 - 200,000
சணல் ஆடு குட்டியுடன் - 110,000
(860)
076 234 6416

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WESTERN UNION WU MoneyGram Ria
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# பப்புவா நியூ

# பயங்கர ந

## 100 இற்கும் மேற்பட்

(போர்ட் மொறஸ்பி)

**பப்புவா நியூகினியாவில் நேற்று அதிகாலை ஏ நிலச் சரிவில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டே ந்துள்ளனர்.**



தென் பசுபிக் தீவு நாடான பப்புவா நியூகினியா தலை நகர் போர்ட் மோர்ஸ்பிக்கு வடமேற்கே சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள "என்க" மாகாணம். இங்குள்ள காகலம் கிராமத்தில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டதாக "ஏபிசி" செய்தி தகவல் தெரிவிக்கிறது.

இதனால் ஏற்பட்ட துல்லியமான பாதிப்பு நிலவரம்

## தான் உருவாக்கிய செயலியை 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்த இளைஞன்

(டில்லி)

இளைஞர் ஒருவர் தான் உருவாக்கிய செயலியை 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


அசாம் மாநிலத்தைச் சேர்ந்த கிஷான், என்ற26 வயதான இளைஞரே தனது படைப்பான Texts.com என அழைக்கப்படும் மெசேஜ் செயலியை உருவாக்கி வேர்ட்பிரஸின் (Word Press) தாய் நிறுவனமான ஆட்டோமேட்டிக் கிடம் ரூ.416 கோடிக்கு விற்பனை செய்துள்ளார்.

குறித்த செயலி மூலம் எந்தவித தடங்கலும் இல்லாமல் வட்ஸ்-அப், இன்ஸ்டாகிராம், டுவிட்டர் , டெலிகிராம் என அனைத்து பிரபல செயலிகளையும் ஒருங்கிணைத்து ஒரே இண்டர்ஃபேஸின் கீழ் கொண்டுவர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிஷான் உருவாக்கிய இந்த புதுமையான செயலி, ஆட்டோமெட்டிக் நிறுவனத்தின் சிஇஓ மற்றும் நிறுவனர் மேட் முலன்வெக்கின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையிலேயே. கிஷான் தனது செயலியை சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்துள்ளார்.

10 ஆம் வகுப்புடன் தனது கல்வியை இடை நிறுத்திய கிஷான் இணையத்தின் மூலம் கிடைத்த அறிவைக் கொண்டே குறித்த செயலியை கண்டு பிடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## புனேயில் படகு கவிழ்ந்து விபத்து 6 பேரின் உடல்கள் மீட்பு



(டில்லி)

மராட்டிய மாநிலம், புனேயில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற படகு விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். உஜானி அணைக்கட்டுப் பகுதியில் கலாஷி மற்றும் புகாவ் கிராமங்களுக்கு இடையே இயங்கி வரும் படகு சேவையொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த படகில் 7 பேர் பயணித்துள்ள நிலையில், சீரற்ற காலநிலை காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒருவர் மாத்திரம் உயிர் பிழைத்துள்ள நிலையில் ஏனைய ஆறு பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மராட்டியத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-6)

## போட்டோ எடுக்கும் போது குதிரையைத் தொட்ட பெண்

### ஆவேசமடைந்த குதிரை பெண்ணை தாக்கியது

(லண்டன்)

லண்டனின் வெஸ்ட் மின்ஸ்டர் பகுதியில் குதிரைப் படை காவலர்களின் அணி வகுப்பு நடந்துள்ளது. அப்போது அங்கு சென்றிருந்த பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் குதிரை முன்பு நின்று புகைப் படம் எடுத்துள்ளார்.

அந்த சுற்றுலாப் பயணி புகைப்படம் எடுப்பதற்காக குதிரையை தொட்டுள்ளார். இதனால் ஆவேசம் அடைந்த அந்தக் குதிரை கிளர்ந்தெழுந்து அந்தப் பெண்ணை தாக்கி உள்ளது.

இதனால் அந்தப்பெண் தடுமாறி கீழே விழுந்தார். அவருக்கு அங்கிருந்து சிலர் உதவி செய்தனர். பின்னர் குதிரைப் படை வீரர் அந்தக் குதிரையை சாந்தப்படுத்தி உள்ளார். இது தொடர்பான காட்சிகள் எக்ஸ் தளத்தில் வைரலாகி 10 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை குறித்துள்ளது. (நி-6)

## தாய்வான் எல்லையில் சீனா போர்ப்பயிற்சி

### 2 ஆவது நாளாகவும் தொடர்கிறது

(தாய்பெய்)

2ஆவது நாளாக தாய்வான் எல்லையில் சீனா போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றமை உலகநாடுகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தாய்வானின் கின்மென், மாட்சு மற்றும் டோங்கி தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் சீனா 2 ஆவது நாளாக போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. சீனாவின் இந்தச் [illegible] டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபோன்ற ஆத்திரமூட்டும் நடவடிக்கையை சீனா கைவிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சூழலில், தாய்வானின் பிரிவினைவாத நடவடிக்கைக்கு தண்டனையாக இந்த 2 நாள் போர் ஒத்திகையைத் தொடங்கியுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

2 நாள் போர் ஒத்திகை பயிற்சியில் இராணுவம், கடற்படை, விமானப் படை, ஆகியவை பங்கேற்றுள்ளன. (நி-6)

## அடுக்குமா

### 14 பேர் உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கினியாவில் நிலச்சரிவு

## ...ட்டோர் உயிரிழப்பு



...ஏற்பட்ட பாரிய ...ட்டோர் உயிரிழ...

குறித்த தகவலை அதிகாரிகள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. எனினும் நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 இற்கும் மேல் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


நிலச்சரிவில் புதையுண்டு இறந்தவர்களின் உடல்களை உள்ளூர் வாசிகள் வெளியே எடுப்பதை சமூக வலைத்தளங்களில் வெளியான வீடியோக்களில் காண முடிகிறது.

பப்புவா நியூகினியா என்பது 800 மொழிகள் பேசுவோரைக் கொண்ட வளரும் நாடு. இங்கு வாழ்வாதாரம் பெரும்பாலும் விவசாயமாகும்.

27 மில்லியன் மக்கள் வசிக்கும் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக அதிக (10 மில்லியன்) மக்கள் தொகை கொண்ட தென் பசிபிக் நாடு பப்புவா நியூகினியாவாகும். (நி-6)

# ...மாடி குடியிருப்பில் தீ விபத்து

## ...உயிரிழப்பு



(ஹனோய்)

வியட்நாமின் ஹனோய் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நள்ளிரவில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

இரண்டு மீற்றர் அகலமான பாதையில் அமைந்துள்ள இக்கட்டடத்தில் தீ வேகமாக பரவி எரிந்தது.

இதனால் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அலறியடித்தபடி வெளியே ஓடி வந்தனர். ஆனால் சிலர் தீயில் சிக்கிக் கொண்டனர்.

தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் போராடி தீயை அணைத்தனர். இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். (நி-6)

# அடுத்த மாதம் விண்வெளியில் பயணிக்கிறார் சுனிதா வில்லியம்ஸ்

## நாசா அறிவிப்பு



(வோஷிங்டன்)

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ். இவர்கடந்த 1998 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவில் இணைந்தார். இதனையடுத்து அங்கு விண்வெளிக்குச் சென்று பல்வேறு ஆய்வுகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி இவரது முதல் பயணம் 2006 ஆம் ஆண்டிலும், 2 ஆவது விண்வெளிப் பயணம்2012 ஆம்ஆண்டிலும் வெற்றிகரமாக அமைந்தது. இதன்மூலம் மொத்தம் 322 நாட்கள் விண்வெளியில் தங்கி உள்ள அவர் அங்கு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்.

இதற்கிடையே, 3 ஆவது முறையாக மீண்டும்அவர் விண்வெளிப்பயணம் மேற்கொள்ள இருந்தார். இவருடன் ஸ்டார்லைனர்வில்லியம்ஸ், புல்ச் வில்மோர் ஆகியோரும் செல்ல இருந்தனர். அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் கனாவெரலில் உள்ள விண்வெளி ஏவுதளத்தில் இருந்து போயிங் ஸ்டார்லைனர் நிறுவனத்துக்குச் சொந்தமான விண்கலம் கடந்த 7 ஆம் திகதி அனுப்பப்பட இருந்தது. ஆனால் அவர்களது விண்வெளிபயணம் திடீரென ஒத்திவைக்கப் பட்டது. ஒக்சிஜன் குழாயில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில், சுனிதா வில்லியம்ஸ் அடுத்த மாதம் விண்வெளிப் பயணம் மேற்கொள்ள உள்ளார் என நாசா தெரிவித்துள்ளது. ஜூன் முதலாம் திகதி பகல் 12.25 மணிக்கு இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட உள்ளது எனவும். 2,5,6 ஆகிய மாற்றுத் திகதிகளையும் அறிவித்துள்ளது.

விண்வெளியில் அதிக முறை நடந்த பெண் என்ற சாதனைக்கு சொந்தக்காரரான சுனிதா 321 நாட்கள் விண்ணில் கழித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# எச்.ஐ.வி வைரஸை பலவீனப்படுத்தும் தடுப்பூசி

## அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

எச்.ஐ.வி வைரஸை பலவீனப்படுத்தும் புதிய தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள டியூக் வெக்சின் என்ற நிறுவனமே இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

எயிட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி வைரஸால் பாதிக்கப்பட்ட பிறகு, உடலின் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடைகிறது.

குறித்த தடுப்பூசி மூலம் உடலில் புகுந்த எச்.ஐ.வி வைரஸை அடையாளம் கண்டு பலவீனப்படுத்த முடியும் என டியூக் வெக்சின் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தடுப்பூசிக்குப் பிறகு உடலில் புதிதாக உற்பத்தி செய்யப்படும் Antibodies இனால் இந்த மாற்றம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசி தற்போது பரிசோதனை மட்டத்தில் காணப்படுவதாகவும் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் எனவும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் மீண்டும் ஜனாதிபதியானால்

# பண்டாரநாயக்க குடும்பத்தின் நிலைமையே ராஜபக்ஷர்களுக்கும் ஏற்படும்- கம்மன்பில



(கொழும்பு)

நாட்டில் மீண்டும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பண்டார நாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் கதியே ராஜபக்ச குடும்பத்திற்கும் ஏற்படும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சி யின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களின் கேள்விக்கு உதய கம்மன்பில இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றோம்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அது ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் பாதகமாக அமையும். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

ஆனால் அதற்கு ரணில் விக்கிரமசிங்க 113 உறுப்பினர்களின் ஆதரவை கையெழுத்துக்கள் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு வாருங்கள் பாராளுமன்றத்தை கலைக்கலாம் என பசிலிடம் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கு 113 உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு பசில் ராஜபக்ஷ எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி பக்கம் இணைந்துள்ளனர்.

ஆகவே அந்தக் கட்சியின் தலைவர் யார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்குமாறு பொது ஜ்ன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் நிலைமை தமக்கும் ஏற்படுமோ என ராஜபக்ஷர்கள் அச்சமடைகிறார்கள்.

நாட்டு மக்கள் தமது பக்கமே நிற்கிறார்கள் என நினைத்துக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவுக்கு இந்த ஆண்டு இடம் பெறவுள்ள தேர்தலில் மக்கள் தகுந்த பாடத்தினை வழங்குவார்கள் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 100-140 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 150 | 100-130 | 150 |
| தக்காளி | 250 | 200 | 280 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 100-130 | 200 |
| கோவா | 250 | 220 | 200 | 150 | 200 |
| கரட் | 250 | 350 | 220 | 200 | 300 |
| பூசணி | 100 | 80 | 100 | 80-120 | 100 |
| புடோல் | 200 | 360 | 150 | 100-150 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 400 | 400 |
| வெண்டக்காய் | 150 | 200 | 150 | 230 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 240 |
| பயற்றங்காய் | 400 | 350 | 500 | 350 | 160 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 200 | 300 | 450 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 1100 | 1000 | 600-900 | 1000 |
| போஞ்சி | 500 | 650 | 600 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | 60-80 | 160 |
| தேசிக்காய் | 1000 | 1300 | 1200 | 800-1000 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 100 | 150 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 80 | -- |

## திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமாக மலேசியாவிற்குச் சென்ற 1,608 இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த மார்ச் மாதம் 1ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையிலான 2 மாத காலப்பகுதியில் குறித்த 1,608 பேரும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## இன்று ஒரு தகவல் 134



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# முதுமையில் இளமை

எங்கள் ஊரில் ஒரு பாட்டி இருந்தார். நூறு வயது தாண்டியவர். வயதான காலத்தில் கூட மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். சக்கரை எல்லாம் நிறையப் போட்டு தேநீர் குடிப்பார். பாட்டிக்கு சக்கரையை நிறையக் கொடுத்தால் சக்கரை வியாதி வந்து விடாதா என்று சிலபேர் கேட்பது வழக்கம். சக்கரைக்குத் தான் வியாதி வருமே தவிர பாட்டிக்கு வராது என்று நான் சொல் லுவேன். அவருடைய உடம்பு அவ்வளவு வலிமை. அது எப்படி அவர்களால் மட்டும் இந்த வயதிலேயும் இப்படி இருக்க முடியுது?

விஞ்ஞானம் என்ன சொல்கிறது தெரியுமா. மூளை சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டு இருந்தால் முதுமை யும் தள்ளிப் போய்க்கொண்டே இருக்குமாம். வயது ஆவதற்கான ரகசியம் மூளையிலே தான் இருக்கின்றதாம். 70 மூளையை சோதனை செய்து பார்த்து பேராசிரியர் ஹோரங் என்பவர் இதை கூறியிருக்கின்றார். கூடுதலாக உடலும் மனதும் எப்போதும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருக்க வேண்டும்.

பாலித்தீவுக்குப் பக்கத்தில் கிழக்கிலே லாம் லுக் என்று ஒரு சிறிய தீவு. அதிலே டேசன் அங்குங் என்று ஒரு சிறிய கிராமம். அந்த ஊரிலே 130 வயதில் ஒருவர் இருந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள், 40 பேரப்பிள்ளைகள் மனைவி எத்தனை தெரியுமா? 7பேர். ஆமாம் இவர் ஏழு தடவை திருமணம் செய்திருக்கிறார். கடைசியாக ஏழாவது திருமணம் நடக்கும் போது இவருக்கு வயது என்ன தெரியுமா? 110!

மணமகனுக்கு வயது 110, மணமகளுக்கு வயது 60. கடைசிக் காலத்திலும் அவர் சுறுசுறுப்பாக வேலை செய்வாராம். கூடை பின்னி நிறைய சம்பாதிப்பார். இதே போல் பிலிப்பைன்ஸில் ஒரு பெரியவர். அவருக்கு வயது 87 தான். இவருக்கு அவருடைய அம்மா நினைப்பு அடிக்கடி வந்து விடுமாம். அம்மா பிள்ளை போல இருக்கு! இவர் பெயர் செவாட்டோ.

இவர் தன்னுடைய 27 ஆவது வயதில் பிலிப்பைன்ஸை விட்டு ஹவாய்க்கு வந்து விட்டார். அதாவது அப்பவே தாயைப் பிரிந்து விட்டார். ஏன் ஹவாய்க்கு வந்தார்? பிழைப்புத் தேடித்தான். ஹவாய்க்கு வந்து கரும்புத் தோட்டத்திலே வேலை செய்தார். நிறைய சம்பாதித்தார்.

அதற்குப் பின் அவர் ஊருக்கு திரும்பவே இல்லை. ஹவாயிலே தங்கி விட்டார். நிறைய நாளைக்குப் பின் என்ன நடந்தது? திடீர் என்று அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று ஆசை வந்தது. உடனே ஹவாயை விட்டு சொந்த ஊருக்கே வந்து விட்டார். அம்மாவைத் தேடினார். பார்த்தால் அந்த அம்மா இவரை விட ஆரோக்கியமாக இருந்தார்களாம்.

அப்போது அவருடைய அம்மாவின் வயது 107. அம்மாவும் பிள்ளையும் மிகவும் ஆரோக்கியமாகவும் சந்தோசமாகவும் வாழ ஆரம்பித்தார்கள்.

பத்திரிகைக்காரர்கள் எல்லாம் போய் பார்த்து பேசி இருக்கிறார்கள். ஒரு பத்திரிகை நிருபர் அந்த பெரியவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். இப்போது உங்களுடைய இலட்சியம் என்ன? அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? பொருத்தமாக ஒரு பெண் கிடைத்தால் திருமணம் செய்யலாம் என்று நினைக்கிறேன் என்றாராம்.

மூளை சுறுசுறுப்பாக இருந்தால் முதுமை தள்ளிப் போகும் என்ற உண்மை எவ்வளவு தூரம் சரியாக இருக்கின்றது பார்த்தீர்களா? அதனால் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது தான் நல்லது. சில வருடத்திற்கு முன் எட்டைய புரத்திற்கு போய் இருந்தோம். அங்கே நூறு வயது தாண்டிய ஒரு அம்மாவைப் பார்த்தோம். பெயர் வள்ளிக்கண்ணம்மாள். சிறிய வயதிலேயே பாரதியாருக்கு விளையாட்டுத் தோழியாக இருந்தவர். பின் எட்டையபுரம் சமஸ்தானத்தில் ஆஸ்தான நர்த்தகியாக இருந்தவர். அவர்களிடம் பேட்டி ஒலிப்பதிவு செய்து திருநெல்வேலி வானொலியில் ஒளிபரப்பினோம்.

அவர்கள் அப்போது என்ன சொன்னார்கள் தெரியுமா? இப்போது கூட நீங்கள் பார்ப்பதற்கு தயாராக இருந்தால் நான் நடனமாட தயாராக இருக்கின்றேன் என்றார். அவ்வளவு சுறுசுறுப்பு! தைரியம்! ஆரோக்கியமான உடம்பு!

ஒரு பத்திரிகை நிருபர் 120 வயதிற்கு மேலேயான ஒரு வயதான அம்மாவிடம் பேட்டி கண்டாராம். எல்லாக் கேள்விகளையும் கேட்டு விட்டு கடைசியாக இப்படி சொல்லியிருக்கிறார். ஆண்டவன் அருளாலே அடுத்த வருடமும் உங்கள் பிறந்த நாள் அன்றைக்கு வந்து உங்களை சந்திக்க ஆசைப்படுகின்றேன் என்றாராம். அதற்கு அந்த அம்மா என்ன சொன்னார் தெரியுமா? நிச்சயமாக அது நடக்கும் என்று நானும் நம்புகின்றேன். கவலை வேண்டாம். உங்களைப் பார்த்தால் ஆரோக்கியம் உள்ளவராகத்தான் தெரிகின்றது என்றாராம்.

நிருபர் வாயடைத்துப் போய் வந்து விட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண யூடோ போட்டி



## முல்லை மாவட்டம் ஆண்கள், பெண்கள் பிரிவில் முதலிடம்

வடமாகாண யூடோ போட்டி யில் முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள், பெண் கள் இரு அணியினரும் 1ஆம் இடத்தை பெற்று ள்ளனர்.

வடமாகாண விளை யாட்டுத் திணைக்களத் தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட யூடோ போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை முல்லை மாவட்ட உள்ளக அரங்கில் இடம் பெற்றது.

இவ் நிகழ்வில் விருந்தி னராக வடமாகாண விளையாட்டு திணைக் களத்தின் மாவட்ட விளை யாட்டு உத்தியோகத்தர், மாவட்ட வைத்திய அதி காரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.


ஆண்கள் பிரிவில் முல் லைத்தீவு மாவட்டம் 5 தங்கம் 4 வெள்ளி, 3 வெண்கலம் என 12 பத க்கங்களும், வவுனியா மாவட்டம் 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 7 பதக்கங்களும், கிளிநொச்சி மாவட்டம் தங்கம் 1, வெண்கலம் 1, என 2 பதக்கங்களும் மன் னார் மாவட்டம் 1 வெள்ளி, 1 வெண்கலம் என 2 பத க்கங்களை பெற்றுள்ள னர்.

பெண்கள் பிரிவில் முல் லைத்தீவு 5 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் என 14 பதக்கங்கள், கிளி நொச்சி 1 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்கள் , வவு னியா மாவட்டம் 1 தங்கம், வெண்கலம் 1 என பதக்கங் களை பெற்றுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (நி-6-299)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3125

மிதுஷா




சஜந்தவி




பிரகாஷ்




சாத்வீகா




ஆனந்தி




கீர்த்தனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 490





படகைப்பிடித்து அதில் ஏறுவது எளிய காரியமில்லை. அலைகளுடன் போராடிக்கொண்டு வந்தியத்தேவனையும் தாங்கிக் கொண்டு படகில் ஏறுவதற்கு முயன்ற ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாக இருந்தது.

இதோ படகு கைக்கு அகப்படுவது போலிருக்கும் அடுத்த கணம் எட்டாத தூரத்தில் போய்விடும். கடைசியாக, அதற்கும் ஒரு பெரிய அலை உதவி செய்தது. படகின் அருகில் உயரமாக எழுந்த அந்தப் பேரலையோடு அவர்களும் எழுந்தார்கள். மாலுமிகளின் உதவியுடன் படகில் குதித்தார்கள்.

"துடுப்பை வலியுங்கள்! வேகமாய் வலியுங்கள்!" என்றார் இளவரசர்.

ஏனெனில், எரிகின்ற கப்பல் கடலில் முழுகும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்படி முழுகும்போது ஏற்படும் கொந்தளிப்பில் படகு கவிழ்ந்தாலும் கவிழ்ந்துவிடும். அது மட்டுமன்று கப்பல் முழுகித் தீ அணைந்துவிட்டால் பிறகு மற்றொரு கப்பலை அவர்கள் பிடிப்பது அசாத்தியமாகி விடலாம்.

ஆகா! அதோ கப்பல் முழுகத் தொடங்கிவிட்டது. கொழுந்துவிட்டு எரிந்த பாய்மரங்களுடனே அது கடலில் முழுகிய காட்சிதான் என்ன பயங்கர சௌந்தர்யமாயிருந்தது! அதை அவர்களால் அதிக நேரம் அனுபவிக்க முடியவில்லை. இளவரசர் எதிர்பார்த்தது போலவே கடலில் ஒரு பெரிய கொந்தளிப்பு. வானளாவி மேலெழுந்த அலைகள்.

படகு என்னமோ அலைகளைச் சமாளித்துக் கொண்டது. ஆனால் எரிந்த கப்பல் மூழ்கியதும் சுற்றிலும் சூழ்ந்த இருளில் மற்றொரு கப்பல் இருந்த இடமே தெரியாமல் போயிற்று. திக்குத்திசை ஒன்றுமே தெரியவில்லை. படகும், கப்பலும் ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அகன்று போய் கொண்டிருக்கின்றனவோ, அதைத் தெரிந்து கொள்ளவும் வழியில்லை. இரண்டிலும் அபாயம் உண்டு.

இருட்டில் கப்பல் இருக்குமிடம் தெரியாமல் அதை நெருங்கிச் சென்று முட்டிக்கொண்டால், படகு துகள் துகளாகும். விலகிப் போய்விட்டால், கேட்பானேன்? நடுக்கடலில், காரிருளில் அந்தச் சின்னஞ்சிறு படகினால் என்ன செய்ய முடியும்? சமுத்திர ராஜனே! உன் காதலி பொன்னி நதி தந்த அருமைச் செல்வனை நீதான் காப்பாற்ற வேண்டும்!

வாயு பகவானுடைய லீலைகள் வெகுவெகு அதிசயமானவை. அந்தப் பெரும் சுழிக்காற்று எவ்வளவு அவசரமாக வந்ததோ அவ்வளவு அவசரமாகவே போய்விட்டது. போகும் வழியிலெல்லாம் கடலைப் படாதபாடு படுத்திவிட்டுப் போய்விட்டது.

சுழிக்காற்று போய்விட்டது சரிதான் ஆனால் அதனால் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு இலேசில் அடங்கிவிடாது. ஒரு இரவும், ஒரு பகலும் நீடித்திருந்தாலும் இருக்கும். அந்தக் கொந்தளிப்பின் வேகம் நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் கோடிக்கரையில் விஸ்தாரமான மணற் பிரதேசத்தையெல்லாம் கடல் ஏறி மூடிவிடும். நாகப்பட்டினத்தின் கடற்கரை மீது பேரலைகள் மோதி இடித்துக் தகர்க்கப் பார்க்கும். இன்னும் அக்கொந்தளிப்பு காங்கேசன் துறை திரிகோண மலை வரையில் பரவும். மாதோட்டத்தையும், இராமேசுரத்தையும் கூட ஒரு கை பார்த்துவிடும்.

இளவரசர் முதலியோர் ஏறியிருந்த படகு அலைகளால் மோதுண்டு மிதந்து கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் துடுப்பு வலிப்பதையும் நிறுத்தி விட்டார்கள்.


(தொடரும்...)

---

# சிறுவர் அரங்கம்



## பிரம்மராட்சஷன்



(நேற்றைய தொடர்ச்சி..)

அதைக் கேட்டதும் பிரம்மராட்சஷனின் கண்கள் கலங்கின. சரியான பதிலை சொல்லி விட்டாயே? என்பது போல சுடலையை பார்த்தது. அடுத்த கேள்வியைக் கேள்!என்றான் சுடலை.

நன்மையை விட தீமையே செய்கிற சிறிய வஸ்து எது? மனிதனின் நாவு! என்றான்.

தான் நினைத்திருந்த பதிலையே தங்கு தடையின்றி சொன்னதும் பிரம்மராட்சஷன் அசந்து போயிற்று. மூன்றாவதாக தான் கேட்கப் போகிற கேள்விக்கு அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்றெண்ணி, "உருண்டு வேகமாக ஓடுவது எது?" என்று கேட்டது. "காலம்!" என்றான்.

அடுத்த கணம், சிறுவனே! என் கேள்விகளுக்கு சரியான பதிலை சொல்லிவிட்ட நீ சிறந்த அறிவாளி தான். நான் தாயன்பை புரிந்து கொள்ளாமல் என் அன்னையை சிறிய வஸ்துவான என் நாவால் திட்டி வதைத்தேன். அவளைக் கொடுமைப்படுத்தினேன்.

என்னை பத்து மாதம் சுமந்து பெற்ற அவள் மணி வயிற்றை எட்டி உதைத்தேன். பெற்ற மனம் துடித்தது. நான் என் தாய்க்கிழைத்த கொடுமைகளை பார்த்த ஒரு முனிவர் "நீ பிரம்மராட்சனாகக் கடவாய்" என்று சபித்துவிட்டார். அது போலாகிவிட்டது.

"நான் தவறுகளை உணர்ந்து" எனக்கு எப்போது சாபவிமோசனம்?" என்று கேட்டேன். காலம் வரும் பொழுது என்று சொல்லி விட்டு போய்விட்டார் அம்முனிவர். அதற்குத் தான் நான் இவ்வளவு நாட்களாக காத்திருந்தேன்.

"உருண்டு வேகமாக ஓடும் காலம் உன் வடிவில் வந்து என்னை சாபத்தில் இருந்து விமோசனமடைய செய்து விட்டது." என்று சொல்லி சுடலையை வணங்கி எழுந்த போது பிரம்மராட்சஷன் மறைந்து அழகான ஒரு இளைஞன் அங்கிருந்தான்.

அந்த இளைஞன் ஆல மரத்தில் தொங்கிய தலைகளை எல்லாம் எடுத்து மண் தோண்டி புதைத்தான். ஆலமரத்தடியில் இருந்த மேடையையும் பிற பகுதிகளையும் சுத்தப்படுத்தினான். குளக்கரையை சுற்றி வளர்ந்து புதிராக மண்டிக் கிடந்த செடி, கொடிகளை நீக்கி குளக்கரையை அழகாக்கினான்.

பிரம்மராட்சஷனின் கொடிய மூச்சுப்பட்டு வாடியும் கருகியும் போய் இருந்த ஆல மரம் இப்போது பச்சை பசேலென்ற இலைகளோடு காணப்பட்டது. மரத்தை விட்டுச் சென்ற பறவைகள் எல்லாம் திரும்பி ஆல மரத்தில் தங்கின.

அவைகளில் விதவிதமான குரலொலிகள் இனிமையாக கேட்டன. வழிப்போக்கர்களும், யாத்ரீகர்களும் ஆலமரத்தடியில் உள்ள மேடையில் தங்கி ஓய்வெடுத்து குளத்து நீரை பருகி மகிழ்ந்தனர். இவ்வளவுக்கும் காரணமான சுடலையை எல்லாரும் பாராட்டினர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்குநாம் செய்யும் உதவிகள் நமது வாழ்வின் மதிப்பை உயர்த்தும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தெருவில் உறங்குகின்ற அவலம் காண்மினே!

எமது யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக மனதை வேதனைப்படுத்துகின்ற விடயங்கள் பரவலாக நடப்பதைக் காணமுடிகிறது.

அவற்றையெல்லாம் இங்கு கூறி நிவாரணம் தேடுவதென்பது முடியாத காரியம்.

ஆம், குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது சம்பந்தப்பட்டவர்களுக்கு வெறுப்பைக் கொடுக்கிறது.

எனவே மௌனம் கலகநாஸ்தி என்று இருந்துவிடலாமென்றால், மனம் கேட்பதாக இல்லை.

பரவாயில்லை. பத்திரிகைகள் தமது கடமையைச் செய்தாக வேண்டும். அதனாலேயே பத்திரிகைத் தொழிலை பத்திரிகைத் தர்மம் என்று நம் முன்னோர்கள் கூறி வைத்தனர்.

இங்கு பத்திரிகைத் தர்மம் என்பது இரண்டு வழிகளில் பின்பற்றப்பட வேண்டும். அதில் ஒன்று இல்லாததை – உண்மைக்குப் புறம்பானதை – தீரவிசாரித்தறியாததை செய்தியாகப் பிரசுரிப்பது தர்மத்துக்குத் தீங்கானது.

அத்துடன் சொந்த நலன் சார்ந்து செய்திகளை வெளியிடுவது – புகழ்பாடுவது – வஞ்சிப்பது இவையனைத்தும் பாவகாரியங்களாம்.

அதேபோன்று உண்மையானதும் கட்டாயம் வெளிப்படுத்த வேண்டியதுமான தகவலை வெளிப்படுத்தாமல், இருட்டடிப்புச் செய்வதும் பத்திரிகைத் தர்மத்தை மீறுகின்ற செயலாகும்.

ஆகையால்தான் பத்திரிகையாளர்கள் நடுவுநிலை நின்று நெஞ்சுக்கு நீதியாகச் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில், யாழ்ப்பாணத்தில் இப்போது சில குடும்பங்கள் கடை வாசல்களிலும் தெருவோரங்களிலும் உறங்குவதைப் பார்க்க முடிகிறது.

அதிலும் குறித்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளும் சிறுவர்களும் அவ்வாறு உறங்குவதைக் காணமுடிகின்றது.

இங்குதான் இவர்கள் யார்? எதற்காக இப்படி இரவு வேளைகளில் கடைவாசல்களிலும் தெருவோரங்களிலும் உறங்குகிறார்கள்? இவர்கள் வீடற்றவர்களா? என்ற கேள்விகள் எழுகின்றன.

பொதுவில் 1986களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இவ்வாறானதொரு நிலைமை இருந்தமை உண்மை.

யாழ்ப்பாண வீதியோரங்களில் குந்தியிருந்து சோதிடம் பார்க்கின்ற வழமையைக் கொண்டவர்கள், அந்தக் காலத்தில் பஸ் நிலையங்களிலும் கடையோரங்களிலும் உறங்கிக் காலம் கழித்தனர்.

உண்மையில் அவர்களுக்கு இல் இடங்களும் இருக்கவில்லை.

ஆனால் அதற்குப் பிற்பாடு இவ்வாறானவர்கள் ஏதோவொரு வகையில் வீடுகளில் குடியமர்த்தப்பட்டனர். அதன் பிற்பாடு குடும்பமாகத் தெருவில் உறங்குகின்ற அந்தப் பரிதாப நிலை இல்லாமல் போயிற்று.

ஆனால் இப்போது மீண்டும் தெருவோரங்களில் குடும்பம் நடத்தி, அங்கேயே உறங்குகின்ற பரிதாப நிலைமை தலை தூக்குவதை யாழ்ப்பாண நகரத்தில் ஆங்காங்கே காண முடிகிறது.

இந்நிலைமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். உரியவர்கள் தங்குவதற்கு ஏற்ற வழிவகைகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து நிலைமை மோசமடைவதைத் தடுக்க முடியாமல் போகும்.

# சிறந்த தலைமைத்துவம் வெளிப்படும் விதம் இதுவே

## யாழில் ரணிலை பாராட்டிய வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

தலைமைத்துவத்துக்கான சிறந்த வெளிப்பாடு சிறந்த தலைவர் ஒருவர் செயற்படக்கூடிய விதம் இதுவே. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர், ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான கட்டடத்தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றியபோதே வடக்கு மாகாண ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். பல்கலைக்கழகத்துக்கான பாரிய மைல்கல் நிகழ்வாக இன்றைய (நேற்று) நிகழ்வு அமைந்துள்ளது.

நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த இந்த கட்டட தொகுதியை விரைவில் திறந்து, பயன்பாட்டுக்கு வழங்குமாறு கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதி அவர்களிடம் கோரிக்கை விடுத்தேன். கோரிக்கையை ஏற்று, மே மாதம் கட்டடம் திறக்கப்படும் என அவர் கூறினார்.

அதன் பின்னர் ஒரு தடவை கூட இது தொடர்பில் பேசவில்லை. எனினும், வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி அவர்கள் இந்த கட்டடத்தை திறந்து வைத்துள்ளார்.

இதுவே தலைமைத்துவத்துக்கான சிறந்த வெளிப்பாடு. சிறந்த தலைவர் ஒருவர் செயற்படக்கூடிய விதம் இதுவே.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி. அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலத்தில், மின்சாரமின்றி நாடு இருளுக்குள் கிடந்தபோது தலைமைத்துவத்தை பொறுப்பேற்று சவால்களை வெற்றிகொண்டார்.

பல சவால்களை தனிநபராக எதிர்கொண்டு, நாட்டை மாற்றியமைத்தார். இவ்வாறான ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்கில் ஆளுநராக சேவையாற்றுவதில் பெருமிதம் அடைகின்றேன் என்றார். (ம-7,10)

# பாக்கு நீரிணையை கடந்து சாதனை புரிந்த மாணவனுக்கு

## அஞ்சல் திணைக்களத்தால் முத்திரை வெளியீடு

பாக்கு நீரிணையை கடந்து சாதனை புரிந்த 13 வயதுச் சிறுவன் ஹரிஹரன் தன்வந்திற்கு இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரை பணியகத்தினால் முத்திரை ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை (31) வெளியிடப்படவுள்ளது.

இந்த நினைவு முத்திரையை வெளியிடும் நிகழ்வானது கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் அந்தக்கல்லூரியின் அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமானும் கௌரவ விருந்தினர்களாக அஞ்சல் மா அதிபர் ருவான் சாந்த குமார, ஆளுநர் செயலாளர் நாயகம் பி.எல் மத்த நாயக்க, பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித மு. ரணசிங்க ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை தவிசாளர் பி.மதனவாசன், முன்னாள் யாழ் மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், திருகோணமலை மாவட்ட நலன்புரிச்சங்கத்தலைவர் சண்முகம் குகதாசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7,10)

# சிவனொளிபாத மலைக்கான யாத்திரை நிறைவு

ஆறு மாதகாலமாக இடம்பெற்று வந்த சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளது.

சிவனொளிபாதமலை உச்சியில் மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்த தெய்வத்தையும் மற்றும் பூஜைப் பொருட்களையும் புனித விக்கிரகங்கள் அனைத்தும் நேற்று நல்லதண்ணியில் இருக்கும் விகாரைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்னவினால் அனுசாசன முறையின் பின் பிரித் ஓதப்பட்டு மேற்படி தெய்வம் மற்றும் பூஜைப் பொருட்கள் புனித விக்கிரகங்களை நேற்று காலை 8 மணியளவில் இரத்தினபுரி பெல்மதுளை ரஜமகா விகாரைக்கு வாகன தொடரணியாக எடுத்து செல்லப்பட்டது. (ம-7,10)

# துப்பாக்கிச் சூட்டில் யானை உயிரிழப்பு

## சந்தேக நபர் கைதாகி விடுதலை

(அநுராதபுரம்)

அநுராதபுரம், ஹித்தோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹல்மில்லகுளம் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யானை ஒன்று உயிரிழந்துள்ள நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹல்மில்லகுளம் பிரதேசத்தில் உள்ள தோட்டமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்த காட்டு யானைக் கூட்டமொன்று தோட்டத்திலிருந்த பயிர்களைச் சேதப்படுத்திக் கொண்டிருக்கும் போது அங்கிருந்த நபரொருவர் குறித்த யானைகளை விரட்ட முயன்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த யானை ஒன்று இவரைத் துரத்திச் சென்றுள்ள நிலையில் குறித்த நபர் தனது கையிலிருந்த துப்பாக்கியால் யானையைச் சுட்டுக் கொலை செய்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 7 அடி, 3 அங்குலம் உயரம் கொண்ட 20 வயதுடைய ஆண் யானையொன்றே உயிரிழந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. ஹல்மில்லகுளம், துருவில பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள மாங்கேணி கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்கேணியைச் சேர்ந்த 41 வயதுடைய அனஸ்டன் ஹாரலஸ் அலேசியஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 26 ம் திகதி மாங்கேணி தேவாலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு உயிரிழந்த நபர் வீட்டிற்கு சென்ற நிலையில் உறவினர்களுடன் குறித்த கடலில் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை நீராடச்சென்று நீராடிய போது அவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்த உறவினர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் உதவியுடன் நீரில் மூழ்கி காணாமல் போனவரின் சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டுவந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# வர்த்தகத் துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கள் ஓர் பார்வை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

யோகா மற்றும் மன நிகழ்வுகளின் ஆய்வு கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக் கழகம், சுதேச அறிவியல் மீதான சமூகக் கல்வி கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிதிப் பொருளியல் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழகம், ஆங்கில மொழி மற்றும் பிரயோக மொழியியல் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம், ஆக்கத்திறன் இசை தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்திறன், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழகம், நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் மொறட்டுவப் பல்கலைக்கழகம், கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம் ஆகியவை வழங்குகின்றன.

**பல்கலைக்கழக நேரடி அனுமதிகளுக்குப் புறம்பான பட்டப் படிப்புக் கற்கை வாய்ப்புக்கள்**

பின்வரும் மூன்று வகையான நிறுவன அமைப்புக்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளுக்கு அப்பால் வர்த்தகத் துறைசார் மாணவர்களுக்கான பட்டப்படிப்புக் கற்கை நெறி வாய்ப்புக்களை வழங்குகின்றன.

(1) தனியார் பல்கலை கழகங்கள் அல்லது உயர் கல்வி நிறுவனங்கள்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறையின் கீழ்வராத, அரச சார்/பகுதி அரச சார் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும்.

(3) அரச பல்கலைக்கழகங்களில் காணப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறைக்குப் புறம்பான வெளிவாரிக் கற்கை நெறிகள்.

மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கான அனுமதிகள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நெறிப்படுத்தப்படுவதில்லை.

இந்த வகையில் பின்வரும் பத்து உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நேரடி அனுமதி முறையின் கீழ்வராத உயர்கல்வி வழங்கும் அமைப்புக்களாக விளங்குகின்றன.

(1) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்.

(2) தேசிய கல்வி நிறுவனம்

(3) விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய நிறுவனம்

(4) மனிதவள அபிவிருத்தி நிறுவனம்.

(5) தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம்

(6) சமுத்திர துறை சார் பல்கலைக்கழகம்

(7)வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.

(8) தேசிய சமூக அபிவிருத்தி கல்வி நிறுவனம்.

(9) வரைதல் மற்றும் அளவையியல் நிறுவனம்.

(10) திறந்த பல்கலைக்கழகம்.

இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழக சட்டத்தின் 16ஆம் இலக்கத்தின் உப பிரிவு 25 A இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் வர்த்தகப் பரிவு மாணவர்களுக்கான பட்டங்களை



வழங்குகின்றன. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்வி அமைச்சின் https://mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

எமது நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளுக்குள் உள்வாங்கப்படாத மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டு பல்வேறு வகையான வெளிவாரி ரீதியான பட்டப்படிப்புக் கற்கை நெறி வசதிகளை வழங்குகின்றன. அந்த வகையில் வணிகத்துறை மாணவர்களுக்காக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கைகளின் விபரங்களை அட்டவணை 01 காட்டுகின்றது.

அட்டவணை 01: இலங்கைப் பல்கலைக்கழகங்களிலான வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கைகளின் விபரங்கள்

| பல்கலைக்கழகம் | கற்கை நெறி |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | வணிகமாணி<br>வியாபார முகாமைத்துவமாணி |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | வியாபார முகாமைத்துவ மாணி |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | வணிகமாணி (பொது)<br>வியாபார நிர்வாகமாணி |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி |
| கொழும்பு பல்கலைக்கழகம் | நிதிப் பொறியியலில் விஞ்ஞானமாணி |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | வியாபார கற்கைகளில் விஞ்ஞானமாணி<br>முகாமைத்துவம் (பொது) விஞ்ஞானமாணி<br>மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானமாணி |
| களனிப் பல்கலைக்கழகம் | வணிகமாணி (சிறப்பு) |
| மொறட்டுவப் பல்கலைக்கழகம் | தகவல் தொழில்நுட்பமாணி |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி (விவசாய வியாபார முகாமைத்துவம்) |
| வயம்ப பல்கலைக்கழகம் | உணவு வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தல் விஞ்ஞானமாணி |

**இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள்**

இலங்கை திறந்த பல்கலைக் கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறைக்குப் புறம்பாக சான்றிதழ் கற்கை நெறிகள், டிப்ளோமா கற்கை நெறிகள், மற்றும் பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் பட்டப் பின்படிப்புக் கற்கை நெறிகள் ஆகியவற்றை வழங்கும் தேசியப் பல்கலைக்கழகமாகும். இங்கு திறந்த மற்றும் தொலை தூரக் கற்றல் அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. இந்த முறைமையானது யாருக்கும், எங்கும், எந்த நேரத்திலும் கற்றல் வாய்ப்புகளுக்கான திறந்த மற்றும் நெகிழ்வான அணுகுதலை வழங்குகிறது. கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படும் இடங்களை நேரடியாக அணுக முடியாத மாணவர்களுக்கு திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் அணுகுமுறை மிகவும் பயனுள்ள தாக இருக்கும். மாணவர்களுக்கு அவர்கள் அமைந்துள்ள இடத்தில் கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கும் அவர்களின் சூழ்நிலைகளுக்கும் மிகவும் பொருத்தமான நேரத்தில் வழங்கப்படுகின்றது.

இந்த வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வர்த்தகத் துறை சார்ந்த மாண வர்களுக்கு பின்வரும் பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

- முகாமைத்துவக் கற்கைகள் மாணி.
- மனித வளமுகாமைத்துவத்தில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி.
- கணக்கியல் மற்றும் நிதியில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- சட்டமாணி.

இவற்றுக்கு மேலதிகமாக உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்களும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் பல்வேறு உயர் தேசிய டிப்ளோமா மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை மாணவர்களுக்கு வழங்குகின்றன.

இந்த வகையில் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள் வணிகத்துறை மாணவர்களுக்கு பின்வரும் கற்கைநெறிகளை வழங்குகின்றன.

- கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா
- வியாபார நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா
- ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா
- முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா
- தகவல் தொழில் நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா

இதே போன்று வணிகத்துறை மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளினால் பின்வரும் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன.

- கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழ்.
- செயலாளரியல்பயிற்சிக்கான தேசிய சான்றிதழ்.
- கணக்கீட்டில் உயர்தேசிய டிப்ளோமா.
- கணக்கீட்டில்தேசிய டிப்ளோமா.
- சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் கணினிப் பிரயோக உதவியாளர் தேசிய சான்றிதழ்.

அத்துடன் பல்கலைக்கழகக் கல்லூரிகளும் பின்வரும் பட்டங்களை வழங்குகின்றன.

- விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா.
- அழகுக்கலையியல் உயர் தேசிய டிப்ளோமா.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் உயர் தேசியடிப்ளோமா.

**தொழில்சார் தகமைக் கற்கை நெறிகள்**

இது வரையில் விவரிக்கப்பட்ட கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக வணிகத் துறை சார் தொழில்சார் தகமைக் கற்கை நெறிகளைக் கற்பதன் மூலமாக மாணவர்கள் தமது எதிர்காலத்தைச் சிறப்பாகக் கட்டமைத்துக் கொள்ள முடியும்.

இலங்கையில் உயர்தரத்தில் வணிக கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் உலகம் முழுவதும் வியாபித்துள்ள புகழ்பெற்ற வணிக நிறுவனங்களில் அதிக வருமானத்தையும் நற்பெயரையும் தரும் ஏராளமான தொழில் வாய்ப்புகள் உள்ளன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாயில்...

அதிபரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

24ஆம் திகதி போயா தினமான நேற்று மதுபானசாலைகள் மூடப்பட்ட நிலையில் கசிப்பு வியாபாரத்தில் பெண் ஒருவர் ஈடுபடுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## காற்றின்...

வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள 4 ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்கள் தொடர்பிலான தகவல்களை குறித்த குழுவிலுள்ள புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர். இந்த நிலையில் குறித்த நான்கு நபர்களுடன் நாட்டினுள் தொடர்பு வைத்திருந்த நபர்கள் தொடர்பாக ஏற்கெனவே தனியான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர் மாளிகாவத்தையில் வைத்து பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரே சம்பந்தப்பட்ட நால்வருக்கும் விமானச் சீட்டு வழங்குவது உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தற்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இரவு இண்டிகோ விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சென்னை நோக்கி குறித்த நால்வரும் இலங்கையில் இருந்து புறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், இலங்கையை சேர்ந்த வேறு ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் வேறு விமானங்களின் ஊடாக இந்தியாவிற்கு சென்றுள்ளனரா என்பது தொடர்பாகவும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நால்வரும் இதற்கு முன்னரும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தியாவில் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவரான மொஹமட் நுஸ்ரான், நாட்டில் பாரிய போதைப் பொருள் கடத்தல்காரரான பொட்ட நௌபரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## எவ்வித...

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எனவே உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## தேசிய...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டிடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 46 வருடங்களின் பின்னர் 942 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கட்டிடமான மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டிடத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் திறந்து வைத்தார். (ம-7,10,33)

## காணி உறுதிப்...

இதன்போது, யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி, 1286 பயனாளிகள் காணி உறுதிப்பத்திரங்களை பெறுவதற்கு தகுதி பெற்றிருந்தனர்.

அவர்களுள் தெரிவுசெய்யப்பட்ட 322 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

வட மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கி "உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் 13,858 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## கிளிநொச்சி...

துள்ளார்.

இந்த நிலையில் தொடர்ந்து கருத்துரைத்த யோகராசா கனகரஞ்சினி,

"இலங்கை அரசாங்கத்துடன் எத்தனை தடவைகள் பேசியிருக்கிறோம், ஜனாதிபதியாக இருந்தவர்களை எத்தனை தடைவைகள் சந்தித்திருக்கிறோம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட 12 இற்கும் மேற்பட்ட ஆணைக்குழுக்களை பல்வேறு சந்தர்ப்பங்களின்போது சந்தித்துள்ளோம்.

இறுதியாக மூன்று மாத காலத்திற்குள் எங்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தி ஐந்து பேரின் சுயவிபரக் கோவைகளை, சாட்சியங்களுடன் கையளித்திருந்தோம்.

ஆனால், நான்கு வருடங் களாகியுள்ள நிலையில், நாங்கள் வழங்கிய கோரிக்கைகள் தொலைந்து போய் விட்டதாகவும், மீண்டும் அவற்றை கையளிக்குமாறு கோருகின்றனர்.

இப்படியானதொரு இலங்கை அரசாங்கத்திடம் நாங்கள் பேசுவதற்கு தயாரில்லை. ஜனாதிபதியையும் சந்திக்கத் தயாரில்லை. சர்வதேசத்தின் ஊடான ஒரு பொறிமுறையை எதிர்பார்த்து எமது நகர்வுகளை முன்னெடுக்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## பிரபாகரனின்...

அண்மையில் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், முள்ளிவாய்க்காலில் சிக்கியிருந்த அப்பாவி மக்களையும் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்துடன் பதிவு செய்து கப்பல் மூலம் யுத்த வலயத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான சர்வதேச முயற்சி 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் முன்னெடுக்கப்பட்டது.

அந்த முயற்சியை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் பின்னணியில் இருந்து ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தது மாத்திரமல்லாமல் அப்போதைய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருந்தார்.

யுத்த வலயத்தினுள் சிக்கியிருந்த அப்பாவி மக்கள், புலிகள் இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றி கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பாதுகாப்பான பகுதிகளுக்கு கொண்டு செல்வது மாத்திரமன்றி புகலிடக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள தயாரான நாடுகளுக்கு விரும்பியவர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டிருந்தன.

அனைத்து முன்னேற்பாடுகளும் நிறைவடைந்து இறுதிக் கட்ட ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்காக நேரடியாக நான் வருவதற்கு தயாரான போது புலிகளின் தலைவர் பிரபாகரனினால் இந்தத் திட்டம் நிகராகரிக்கப்பட்டமை கவலையான விடயமாகும்.

அனைத்துச் செயற்பாடுகளும் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்துடன் முறைப்படியான பதிவுகள் ஊடாக முன்னெடுக்கப்பட இருந்தமையினால் யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாக தற்போது குற்றஞ்சாட்டப்படுவதைப் போன்ற உயிரிழப்புக்கள், துன்புறுத்தல்கள் காணாமல் போனவை போன்ற பல விடயங்களுக்கான ஏது நிலைகளை தவிர்த்திருக்கலாம்.

மேலும் இராணுவ ரீதியில் நீண்டகாலமாக வெற்றிகரமாக செயற்பட்டு பாரிய கட்டமைப்புக்களை எல்லாம் உருவாக்கிய பிரபாகரன் யுத்தத்தின் இறுதி 3 வருடங்களில் மேற்கொண்ட தீர்மானங்கள் அனைத்தையும் பிழையானவை என்றே நான் கருதுகிறேன்.

எந்தவிதமான சமரசத்திற்கோ தீர்வுகளுக்கோ தயாரில்லாது இருந்த பிரபாகரன், அவர் நம்பியதைப் போன்று இலங்கை இராணுவத்தினருடன் மரபு வழி யுத்தத்தில் தொடர்ந்தும் ஈடுபட முடியாத நிலையில் ஆயிரக்கணக்கான மக்களையும் அழிவை நோக்கி கொண்டு சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துச் செயற்பாடுகளும் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்துடன் முறைப்படியான பதிவுகள் ஊடாக முன்னெடுக்கப்பட இருந்தமையினால் யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாக தற்போது குற்றஞ்சாட்டப்படுவதைப் போன்ற உயிரிழப்புக்கள், துன்புறுத்தல்கள் காணாமல் போனவை போன்ற பல விடயங்களுக்கான ஏது நிலைகளை தவிர்த்திருக்கலாம்.

பல்லாயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களும், புலிகளின் தலைவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான புலிகள் இயக்க உறுப்பினர்களும் தற்போதும் உயிருடன் எம்மத்தியில் வாழ்ந்திருப்பார்கள் என்றார். (ம-7,10)

## வடக்கு...

என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பிரதமர் என்ற ரீதியிலும், ஜனாதிபதி என்ற ரீதியிலும் நான் எப்போதும் இங்கு வருகிறேன்.

ஏனெனில் யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லை. வருமானம் இல்லாமல் வேலை தேடும் மக்கள் இங்கு உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை வலுவாக உள்ளது.

யாழ்.மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சில பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடிந்துள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல பிரச்சினைகள் உள்ளன.

எங்களால் இன்னும் இதனை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை, அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகளைச் சுற்றியே உள்ளன.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், காணாமல் போனோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன்.

காணாமல்போனோர் அலுவலகம் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அதை அப்படியே செய்ய வேண்டும். அத்துடன், வட மாகாணம் அதிக அபிவிருத்தி சாத்தியம் கொண்ட மாகாணம் என்றே கூற வேண்டும்.

இந்த மாகாணத்தில் மிக உயர்ந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ளது.

நிச்சயமாக யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கிய ஆற்றல் மையமாக கட்டியெழுப்ப முடியும்.

மேலும் திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம்" என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் வெற்றிடம்
### யாழ்ப்பாணம்

- கணக்காளர் (பெண்கள்) - (HNDA / கணனி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
- கணனி அறிவுடன் கூடிய அலுவலக உதவியாளர் (பெண்கள்)
- EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிரந்தர தொழில்.

(859)

Ess Jey Electricals No.9 Stanly Road, Jaffna
021 222 2564, 021 222 7430


# நல்லூர் ஜனசக்தியின் 76 வது ஆண்டு நிறைவு விழா

நல்லூர் அரசடி ஜனசக்தி சன சமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் இரண்டாவது நாள் விளையாட்டு நிகழ்வுகளாக இன்று காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்ட நிகழ்வும் காலை 8:30 மணிக்கு தலையணை அடிப்போர் உடற்பயிற்சி கண்காட்சி, கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை, வினோத உடை போட்டி உள்ளிட்ட உள்ளக மைதான நிகழ்ச்சிகளும் இடம்பெறும் விழாவின் இறுதி நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி அளவில் யாழ் மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்ட போட்டி இடம்பெற உள்ளது. அத்துடன் நாளை மாலை 7 மணிக்கு பரிசில் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெற உள்ளது. (ம-7.10)

# கருத்துச் சுதந்திரத்தில் இலங்கை முன்னேற்றம்?

கருத்துச் சுதந்திரத்தில் இலங்கை உள்ளிட்ட 5 நாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

உலகளாவிய கருத்துச் சுதந்திர வெளிப்பாடு தொடர்பான புதிய அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பிரேசில், தாய்லாந்து, நைஜர் மற்றும் பிஜி ஆகிய நாடுகளுடன் இலங்கையும் அதிக வெளிப்படைத்தன்மையை நோக்கி நகர்வதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

25 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, உலகளவில் சுதந்திரமான கருத்து மற்றும் தகவலுக்கான உரிமையின் பகுப்பாய்வை குறித்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

உலகெங்கிலும் உள்ள 195 நாடுகளில் 161 நாடுகளில் இந்த குறிகாட்டிகளின் வெளிப்பாடும் குறித்த ஆய்வில் கணக்கணிக்கப்படுகின்றது. (ம-7.10)


## வேலையாட்கள் தேவை
### LEGEND OF ARCH FIRM PVT LTD

நிறுவனத்திற்கு மேசன், கூலி ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Task அடிப்படையில் வழங்கப்படும். (யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

Director

076 274 7411
077 288 4611

(842)



## தீபம் - யாழ் நகர்
### A/L 2026

வர்த்தகப் பிரிவு | Tamil & English Medium

| | |
|---|---|
| பொருளியல் | M. லிஜிதன் |
| கணக்கீடு | V. தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | K. யதிஸ்சன் |

ஆரம்பம் 25.05.2024 சனி பிற்பகல் 3.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

பாடத் தெரிவினை மேற்கொள்ள வசதியாக மாணவர்கள் இவ் மாதம் கட்டணமின்றி இலவசமாக கல்வி கற்கலாம்

077 2247781

(898)



## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- வரவேற்பாளர்
- துப்புரவு பணியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

070 223 3344

(C-0447)


# போராட்டத்தில்...


எதிர்ப்பு வெளியிடும் வகையில் பல்வேறு கோசங்களை எழுப்பியுள்ளனர்.

இதன்போது, குறித்த பொலிஸார் போராட்டக்காரர்களையும் ஊடகவியலாளர்களையும் கைத்தொலைபேசியில் புகைப்படம் எடுத்துள்ளனர்.

மேலும், அவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-7.10)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1950 . 12 . 19



இறைவன் அடியில் 2021 . 05 . 28

அமரர் ஆறுமுகம் யோகராசா
(இளைப்பாறிய கிராமிய வங்கி முகாமையாளர் - கொடிகாமம்)

அன்பின் திருவுருவே எங்கள் அப்பாவே!
அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்தீர்களே!
எட்டமுடியாத தொலைதூரம் சென்று
மூன்று ஆண்டுகள் ஆனாலும்
கலையாத உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வேண்டுகின்றோம்

(862)

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
077 087 3679
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்



## காணி விற்பனைக்கு

ராச வீதி - 11 ஒழுங்கை (வீதியிலிருந்து 300m உள்ளே) காணி விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (தரகர் தேவையில்லை)

(778)

+4479 5805 0023 (whatsapp)
076 713 9194



## வாடகைக்கு தேவை

பட்டா/ 10.5 அடி கனரக வாகனம் வாடகைக்கு தேவை. அலுமினிய Body அடித்தது.

(865)

தொடர்புகளுக்கு:
077 009 0189



## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-0446)



## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0446)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 275/= Max 3Kg | |
| 1 Kg Prima கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1300/= | ~~1350/=~~ |

400g Anchor
995/=
~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(869)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org